பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
20 07 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

- மகளிரின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

- பகுதி நேர ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

- திமுக தலைமையிலான மாநில அரசு கடந்த 4 ஆண்டுகளில் கடன் சுமையை மேலும் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

- ஹங்கேரி சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்கவுள்ளதை அடுத்து, இன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இந்தக் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, முக்கிய விவகாரங்கள் குறித்தும் அவையில் விவாதம் நடத்த அரசு தயாராக உள்ளது என்று கூறினார்.

இந்த கூட்டத்தொடரின்போது தேசிய விளையாட்டு நிர்வாகம் தொடர்பான மசோதா உள்ளிட்ட பல்வேறு முக்கிய மசோதாக்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நாளை தொடங்கி அடுத்த மாதம் 21ஆம் தேதி தேதி வரை 21 அமர்வுகளாக நடைபெற உள்ளது.

முன்னதாக நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் செயல்பட வேண்டிய உத்திகள் குறித்து இறுதி செய்யும் வகையில் எதிர்க்கட்சிக் கூட்டணித் தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் காணொலி மூலம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, சிவசேனா உத்தரவ் தாக்கரே பிரிவு, திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் பிரிவு உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றன.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பம்வம், ஆபரேஷன் சிந்தூர் போன்ற பல்வேறு விவகாரங்களை எழுப்புவது குறித்து எதிர்க்கட்சிகளிடையே ஒருமித்த கருத்து எற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மகளிரின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் ஜினாஹத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் மகளிர், ஆண்டொன்றுக்கு 10 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்ட தொடங்கியுள்ளதாக கூறினார்.

சுய உதவிக் குழுக்கள் மூலம் லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஒன்றரை கோடி பெண்கள் லட்சாதிபதி சகோதரிகளாக உருவெடுத்துள்ளதாகவும், இந்த எண்ணிக்கை வரும் ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள் இரண்டு கோடி என்ற இலக்கை எட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கிராமப்புற பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாடு முழுவதும் ரயில்வே கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் நேற்று ஜோத்பூர் - ஹைதராபாத் இடையேயான புதிய ரயில் சேவையை தொடங்கி வைத்துப் பேசிய அவர், அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் பல்வேறு ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும், புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

பகுதி நேர ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தாய்லாந்தில் நடைபெறும் பன்னாட்டு மாணவர் மன்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக தமிழகத்தில் இருந்து 6 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது, மாநிலத்திற்கும், பள்ளிக் கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்துள்ளதாக கூறினார்.

<<<<>>>>

அஇஅதிமுக மீண்டும் ஆட்சியமைத்தால் 100 நாள் வேலைத்திட்ட நாட்கள் தேவைக்கேற்ப கூடுதலாக உயர்த்தப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூரில் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், இப்பகுதியில் உள்ள மா விவசாயிகள் பயனடையும் வகையில் மாங்கூழ் தொழிற்சாலை கொண்டுவரப்படும் என்று கூறினார்.

பின்னர் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்.

கடந்த 4 ஆண்டுகளில் மாநில அரசு கடன் சுமையை மேலும் அதிகரித்துள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

அம்மா மினி கிளினிக், மாணவர்களுக்கான இலவச லேப்டாப் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்டசோழபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராஜேந்திர சோழனின் பிறந்த நாளையொட்டி நடைபெற் உள்ள முப்பெரும் விழாவின் கடைசி நாளில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்க உள்ளதாகத் தெரிவித்தார்.

இதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

கும்பகோணத்தில் இருந்து ஜெயங்கொண்டம் வழியாக அரியலூர் வரை ரயில்பாதை அமைக்க வேண்டும் என்ற அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் இளைஞர்கள் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும் என்று பிஜேபி தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலத்தில் நடைபெற்ற நிகர்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இளைஞர்கள் பங்கேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அரசின் திட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு சுயதொழில் செய்து முன்னேற்றம் பெற வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை தெரிவித்தார்.

<<<<>>>>

திருவிழா

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சாரல் திருவிழா இன்று தொடங்குகிறது.

இதனையொட்டி பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வருவதால் மாவட்ட நிர்வாகம் உரிய முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Senthil – 48 Sec)

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பிரிக்ஸ் உறுப்பு நாடுகள், அமெரிக்க டாலருக்கு மாற்றாக புதிய ரொக்க பரிமாற்ற நடவடிக்கைகளை கொண்டு வருவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது என்ற அமெரிக்காவின் கருத்துகளை ரஷ்யா நிராகரித்துள்ளது.

-----------

யுக்ரைனில் உள்ள நகரங்களைக் குறிவைத்து ரஷ்யா தீவிர தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அந்நாட்டுடனான அமைதிப் பேச்சுவார்த்தை அடுத்த வாரம் தொடங்கும் என்று யுக்ரைன் அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

-----------

ஈரானில் நேரிட்ட சாலை விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர்.

-----------

சிக்கிம் மாநிலம் Pakyong மாவட்டத்தில் தரிசு நில மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் சிறுதானியப் பயிர் வகைகளை பயிரிடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

-----------

ஒடிசா மாநிலத்தில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சக்திஸ்ரீ என்ற சிறப்பு திட்டத்தை தொடங்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

-----------

நாமக்கல் மாவட்டம் மங்களபுரம் ஊராட்சியில் புதிய வழித்தட நீட்டிப்பு நகர பேருந்துகளின் இயக்கத்தை மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் தொடங்கி வைத்தார்.

-----------

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அருகே தனியார் பாலிடெக்னிக் கல்லூரியல் தகவல் பெறும் உரிமைச் சட்டம் குறித்த ஒருநாள் பயிலரங்கு நடைபெற்றது.

-----------

தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் மாவட்ட மற்றும் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாநில அமைச்சர் திரு. நாசர் வழங்கினார்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

இப்போட்டியின் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் பிரியா மாலிக் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

62 கிலோ எடைப்பிரிவில் மனீஷா வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம் உட்பட 8 பதக்கங்களை வென்றுள்ளது.

---------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh – அமெரிக்காவின் Nicolas Kotzan இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் Sekou Vangoura - Benjamin இணையை வென்றது.

---------------

---

லண்டனில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

---

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இளையோர் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

<<<<The End>>>>